# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2024/3 - 2017 ජුනි මස 19 වැනි සඳුදා - 2017.06.19

*2024/3 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 2/2013*

***1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்***

14அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 14 அ என்னும் பிரிவின் 1 ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 14அ என்னும் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய தீர்வை வீதத்தை இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கின்றேன்.*

*விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய தீர்வை வீதம் தொடர்பாக 2010, நவெம்பர் 19 ஆந் திகதிய 1680/26 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையானது இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.*

*ரணில் விக்கிரமசிங்க,*
*தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சர்.*

*கொழும்பு,*
*2017, யூன் 14.*

1A-G25744 - 12 (2017/06)



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| விடயம் | பிணையம் | வீதம் |
|---|---|---|
| (1) | நிரற்படுத்தப்பட்ட ஒப்புரவு தொடர்பில் ஏற்புடையற்பாலதான வீதம் -<br><br>(i) முதலாவது 100 மில்லியன் ரூபா வரையானதும் அதற்கு உட்பட்டதுமான வியாபாரப் பெறுமதி மீது<br><br>(ஒரு வியாபார நாளன்று ஆளொருவரினால் நிறைவேற்றப்பட்ட அதே பிணையத்தின் மொத்தம் வியாபாரப் பெறுமதி மீது)<br>(ii) அதன் முதலாவது 100 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட வியாபாரப் பெறுமதி மீது:<br><br>(ஒரு வியாபார நாளன்று ஆளொருவரினால் நிறைவேற்றப்பட்ட அதே பிணையத்தின் மொத்தம் வியாபாரப் பெறுமதி மீது) | 0.072%<br><br><br><br><br>0.045% |
| (2) | கூட்டிணைக்கப்பட்ட கடன் பிணையங்கள் தொடர்பில் ஏற்புடையற்பாலதான வீதம் (பகிரங்க நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் நிரற்படுத்தப்பட்ட தொகுதிக் கடன்கள் மற்றும் நிரற்படுத்தப்படாத தொகுதிக் கடன்கள்)<br><br>(ஒரு வியாபார நாளன்று ஆளொருவரினால் நிறைவேற்றப்பட்ட அதே பிணையத்தின் மொத்தம் வியாபாரப் பெறுமதி மீது) | வியாபார மொத்தப் பெறுமதி X 0.02% 3 ஆல் வகுக்கப்படுகின்றது |
| (3) | நிரற்படுத்தப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்புகளின் கூறுகள் தொடர்பில் ஏற்புடையற்பாலதான வீதம்<br><br>(ஒரு வியாபார நாளன்று ஆளொருவரினால் நிறைவேற்றப்பட்ட அந்த பிணையத்தின் மொத்தம் வியாபாரப் பெறுமதி மீது) | கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் 0.02% |

7-46

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.